## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## நான்காம் பத்து

### ஆறாம் திருமொழி - தாவளந்து
### திருநாங்கூர்த் திருப்பதி 11
### 9. திருக்காவளம்பாடி

** தாவளந்து உலக முற்றும் * தடமலர்ப் பொய்கை புக்கு *
நா வளம் நவின்று அங்கேத்த * நாகத்தின் நடுக்கம் தீர்த்தாய்! **
மா வளம் பெருகி மன்னு * மறையவர் வாழும் * நாங்கைக்
காவளம்பாடி மேய * கண்ணனே! களைகண் நீயே 1

மண்ணிடந்து ஏனம் ஆகி * மாவலி வலி தொலைப்பான் *
விண்ணவர் வேண்டச் சென்று * வேள்வியில் குறை இரந்தாய் **
துண்ணென மாற்றார் தம்மைத் * தொலைத்தவர் நாங்கை மேய *
கண்ணனே! காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 2

உருத்தெழு வாலி மார்பில் * ஒரு கணை உருவ ஓட்டி *
கருத்துடைத் தம்பிக்கு * இன்பக் கதிர் முடி அரசு அளித்தாய் **
பருத்தெழு பலவும் மாவும் * பழம் விழுந்து ஒழுகும் நாங்கை *
கருத்தனே! காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 3

முனை முகத்து அரக்கன் மாள * முடிகள் பத்து அறுத்து வீழ்த்து * ஆங்கு
அனையவற்கு இளையவற்கே * அரசு அளித்து அருளினானே! **
சுனைகளில் கயல்கள் பாயச் * சுரும்பு தேன் நுகரும் நாங்கை *
கனை கழல் காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 4

பட அரவு உச்சி தன் மேல் * பாய்ந்து பல் நடங்கள் செய்து *
மடவரல் மங்கை தன்னை * மார்வகத்து இருத்தினானே! **
தடவரை தங்கு மாடத் * தகு புகழ் நாங்கை மேய *
கடவுளே! காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 5

மல்லரை அட்டு மாளக் * கஞ்சனை மலைந்து கொன்று *
பல்லரசு அவிந்து வீழப் * பாரதப் போர் முடித்தாய்! **
நல்லரண் காவின் நீழல் * நறை கமழ் நாங்கை மேய *
கல்லரண் காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 6

மூத்தவற்கு அரசு வேண்டி * முன்பு தூது எழுந்தருளி *
மாத்தமர் பாகன் வீழ * மத கரி மருப்பு ஒசித்தாய்! **
பூத்தமர் சோலை ஓங்கிப் * புனல் பரந்து ஒழுகு நாங்கை *
காத்தனே! காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 7

ஏவிளம் கன்னிக்காகி * இமையவர் கோனைச் செற்று *
காவளம் கடிதிறுத்துக் * கற்பகம் கொண்டு போந்தாய்! **
பூவளம் பொழில்கள் சூழ்ந்த * புரந்தரன் செய்த நாங்கை *
காவளம்பாடி மேய * கண்ணனே! களைகண் நீயே 8

சந்தமாய் சமயம் ஆகிச் * சமய ஐம்பூதம் ஆகி *
அந்தமாய் ஆதி ஆகி * அருமறை அவையும் ஆனாய்! **
மந்தமார் பொழில்கள் தோறும் * மடமயில் ஆலு நாங்கை *
கந்தமார் காவளந்தண்பாடியாய்! * களைகண் நீயே 9

** மாவளம் பெருகி மன்னு * மறையவர் வாழும் * நாங்கைக்
காவளம்பாடி மேய * கண்ணனைக் கலியன் சொன்ன **
பா வளம் பத்தும் வல்லார் * பார் மிசை அரசராகி *
கோவிளமன்னர் தாழக் * குடை நிழல் பொலிவர் தாமே 10

**அடிவரவு:** தாவளம் மண் உருத்து முனை படம் மல்ல்ரை மூத்தவற்கு ஏவிளம் சந்தம் மாவளம் கண்ணார்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**